




# சுவிசேஷத்தின் துவக்கம்



பாடம் 1 ஜூலை 6, 2024



“யோவான் காவலில் வைக்கப்பட்ட பின்பு,
இயேசு கலிலேயாவிலே வந்து,
தேவனுடைய ராஜ்யத்தின்
சுவிசேஷத்தைப் பிரசங்கித்து: காலம்
நிறைவேறிற்று, தேவனுடைய ராஜ்யம்
சமீபமாயிற்று; மனந்திரும்பி,
சுவிசேஷத்தை விசுவாசியுங்கள்
என்றார்.” (மாற்கு 1:14, 15)

இயேசுவின் வாழ்க்கையை விவரிக்கும் நான்கு சுவிசேஷங்களில் மாற்கு நற்செய்தி மிக குறுகியதாகும்.



இது வேகமான, சுறுசுறுப்பான, ஆற்றல்மிக்க மற்றும் சுருக்கமான கதை. காட்சிகள் நம் கண்முன்னே பளிச்சிடுகின்றன. உண்மையிலேயே முக்கியமானவை மட்டுமே சேர்க்கப்பட்டுள்ளதால், நீங்கள் எந்த விவரங்களையும் தவறவிடமுடியாது.

சுருக்கமாகவும், எல்லாம் விரைவாகவும், நேரம் பணமாகவும் பார்க்கக்கூடிய இந்த 21ஆம் நூற்றாண்டுக்கான நற்செய்தி தான் இந்த மாற்கு சுவிசேஷம். அந்த நேரத்தை கொண்டு விலைமதிப்பற்ற காரியத்தை கற்றுக்கொள்வோமா: “தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவினுடைய சுவிசேஷம்.” (மாற்கு 1:1).




**சுவிசேஷத்தின் ஆசிரியர்:**

- தோல்வியுற்ற மிஷனரி.
- ஊழியத்திற்கு பிரயோஜனமுள்ளவர்.

**சுவிசேஷத்தின் ஆரம்பம்:**

- ஆயத்தம். மாற்கு 1:1-8.
- ஞானஸ்நானம். மாற்கு 1:9-13.
- நற்செய்தி. மாற்கு 1:14-15.

# சுவிசேஷத்தின் ஆசிரியர்

# தோல்வியுற்ற மிஷனரி


"பர்னபாவும் சவுலும் தர்ம ஊழியத்தை நிறைவேற்றினபின்பு மாற்கு என்னும் மறுபேர்கொண்ட யோவானைக் கூட்டிக்கொண்டு எருசலேமைவிட்டுத் திரும்பிவந்தார்கள்." (அப் 12:25)



மற்ற சுவிசேஷகர்களைப் போல, மாற்கு தன்னை பெயரால் குறிப்பிடவில்லை. இந்த சம்பவங்களெல்லாம் நிகழும் போது அவர் சிறு பையனாக இருந்தார், அப்போஸ்தலனாகிய பேதுருவோடு தனக்கு இருக்கக்கூடிய நெருக்கமான உறவைக் கொண்டு இவையெல்லாவற்றையும் கற்றுக் கொண்டிருப்பார் (1 பேது. 5:13). எருசலேமில் பேதுரு சிறையில் அடைக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் பிரார்த்தனை செய்ய கூடியிருந்த தேவாலய இடத்தின் உரிமையாளர் தான் இந்த யோவான் மாற்குவின் தாயார் (அப் 12:12).



சிறிது காலத்திற்கு பின், பர்னபாவும் சவுலும் (எருசலேமுக்கு காணிக்கை வாங்க சென்ற போது) அந்தியோகியாவுக்கு யோவான் மாற்குவை அழைத்துச் சென்றார்கள் (அப் 12:25).





அந்தியோகியாவிலே, புறஜாதிகளுக்கு மிஷனரிகளாக பர்னபாவையும் சவுலையும் பரிசுத்த ஆவியானவர் அழைத்த போது, அவர்கள் யோவான் மாற்குவை கூட்டுபணியாளராக அழைத்துச்சென்றார்கள் (அப் 13:2-5).

ஆனாலும் மிஷனரி வாழ்க்கை வாலிபனான மாற்குவிற்கு மிகவும் கடினமாய் இருந்ததினால், அவர் எருசலேமுக்கு திரும்பி செல்ல முடிவு செய்தார் (அப் 13:13).

# ஊழியத்திற்கு பிரயோஜனமுள்ளவர்


"லூக்காமாத்திரம் என்னோடே இருக்கிறான். மாற்குவை உன்னோடே கூட்டிக்கொண்டுவா; ஊழியத்தில் அவன் எனக்குப் பிரயோஜனமுள்ளவன்." (2 தீமோத்தேயு 4:11)


பவுல் தன் இரண்டாவது மிஷனரி பயணத்தை மேற்கொண்டபோது, மாற்குவை கூட்டுப் பணியாளராக ஏற்றுக்கொள்ள பவுல் சம்மதிக்கவில்லை (அப் 15:36-38). பவுலுக்கு பாரமாக அல்ல, தன்னை ஆதரிக்கிற வல்லமையான உதவியாளர்கள் தேவை. மாற்கு அதற்கு சரியான நபராக இல்லை.





என்றாலும், பர்னபாவுக்கு தன் மருமனாகிய மாற்குவுக்கு நல்ல மிஷனரியாவதற்கான திறன் இருப்பதாக நம்பினார். ஆகவே தான் அவர் மாற்குவை தன்னோடு சீப்புருதீவுக்கு அழைத்துச்சென்றார், ஆனால் பவுல் சீலாவை அழைத்துக்கொண்டு ஆசியாவுக்கு சென்றார்(அப் 15:39-41).





அதன்பின் என்ன நடந்தது என்பதை நாம் அறியோம், ஆனால் பர்னபா சரியாக செய்தார் என்பதை அறிந்திருக்கிறோம். பவுல் தன் மூன்று நிரூபங்களில் மாற்குவை குறித்து குறிப்பிடுவதை நம்மால் காண முடிகிறது, பவுல் மாற்குவை "ஊழியத்திற்கு பிரயோஜனமுள்ளவர்," என்றும், ஒரு சிறந்த கூட்டுபணியாளர் எனவும் கூறுகிறார் (கொலோ. 4:10; பிலே. 24; 2 தீமோ. 4:11).




மாற்குவுக்கு கொடுக்கப்பட்ட இந்த இரண்டாவது வாய்ப்புக்காக தேவனுக்கு நன்றி, இன்று நம்மால் மாற்குவின் சுவிஷேசத்தை வாசித்து மகிழ முடிகிறது.

# சுவிசேஷத்தின் ஆரம்பம்




# ஆயத்தம்


"அவன்: என்னிலும் வல்லவர் ஒருவர் எனக்குப்பின் வருகிறார், அவருடைய பாதரட்சைகளின் வாரைக் குனிந்து அவிழ்க்கிறதற்கும் நான் பாத்திரன் அல்ல."
(மாற்கு 1:7)




தன் குமாரனின் சுவிஷேச பிரயாணத்திற்கு ஆயத்தப்படுத்துகிற தேவனை அறிமுகப்படுத்தி தன் சுவிஷேசத்தை துவங்குகிறார் மாற்கு(மாற். 1:1-2; மல். 3:1). பரலோக ஆசனங்களில் இருந்து பயணம் துவங்குகிறது, இயேசு கிறிஸ்து சிலுவையை சுமந்த பின்பு, பரலோக ஆசனங்களை அவர் மீண்டும் பெற்றுக்கொள்வார் (மாற்கு 16:19).

இந்த வழியை ஆயத்தப்படுத்துவதற்கு, தேவன் "வனாந்தரத்திலே கூப்பிடுகிற சத்தமாகிய", யோவான் ஸ்நானனை தெரிந்துகொள்கிறார் (மாற்கு. 1:3; ஏசா. 40:3).







நமக்காக ஜீவனை கொடுக்கிற இந்த பயணத்தை இயேசு தொடங்குவதற்கு முன், யோவான் ஜனங்களின் இருதயத்தை மனந்திரும்புதலுக்கு நேராக திருப்பி, ஞானஸ்நானம் எடுக்கும்படி அவர்களை அழைக்கிறார்(மாற்கு1:4-6).

தேவக்குமாரனை ஏற்றுக்கொள்ளும்படி அவர்களை ஆயத்தப்படுத்துகிறார்: யோவானைக் காட்டிலும் அவர் வல்லமையுள்ளவர்; மிகவும் தகுதியானவர்; மேலும் அவர் மிகவும் பயனுள்ள ஞானஸ்நானத்தை கொடுப்பார் (மாற் 1:7-8).

# ஞானஸ்நானம்

"அந்த நாட்களில், இயேசு கலிலேயாவிலுள்ள நாசரேத்தூரிலிருந்து வந்து, யோர்தான் நதியில் யோவானால் ஞானஸ்நானம் பெற்றார்." (மாற்கு 1:9)



இயேசு தன் பயணத்தை ஒரு அற்புதமான வழியில் தொடங்குகிறார்: பிதாவாகிய தேவன் தன் குமாரனை வழங்குகிறார், மற்றும் பரிசுத்த ஆவியானவர் தன் சரீர வடிவில் தனது இருப்பை வெளிப்படுத்துகிறார் (மாற்கு 1:10-11). ஆரம்பத்திலேயே, இயேசு தெய்வீக நபராகவும் தேவக்குமாரனாகவும் அறிமுகப்படுத்தப்பட்டார். ஆனால் அவர் மனுஷக்குமாரனாகவும் அறிமுகப்படுத்தப்பட்டார்:



அவர் யோவானால் ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டார், அவரால் யோவான் ஞானஸ்நானம் பெறவில்லை (மாற்கு 1:9)



அவர் பரிசுத்த ஆவியால் வழிநடத்தப் பட்டார் (மாற்கு 1:12)



அவர் பிதாவாகிய தேவனோடு தனிமையில் இருந்தார் (மாற்கு 1:13)



அவர் பிசாசினால் சோதிக்கப்பட் டார் (மாற்கு 1:13)



உலகப்பிரகார மான ஆபத்துக்களை அவர் எதிர்கொண்டார் (மாற்கு 1:13)



தேவதூதர்கள் அவருக்கு பணிவிடை செய்தார்கள் (மாற்கு 1:13)

இவ்வாறாகத்தான் இயேசு நமக்கு முன் அறிமுகப்படுத்தப்பட்டார்: முழுவதுமாக தெய்வீகத்தன்மை மற்றும் மனிதத்தன்மை. அவர் இரட்சகர் மற்றும் சகோதரர், அவர் தேவன் மற்றும் ஒரு சரியான உதாரணம். இது மனித குலத்தின் மீதுடைய தேவ அன்பின் முழுமையான வெளிப்பாடு.

| 70 வாரங்கள் = 490 வருடங்கள் | | | |
|---|---|---|---|
| 7 வாரங்கள் | 62 வாரங்கள் | ½ வாரமும் | ½ வாரம் |
| 49 வருடங்கள் | 434 வருடங்கள் | 7 வருடங்கள் | |



# நற்செய்தி

“யோவான் காவலில் வைக்கப்பட்ட பின்பு, இயேசு கலிலேயாவிலே வந்து, தேவனுடைய ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து:” (மாற்கு 1:14)

## இயேசுவின் முந்தைய செய்தி 3 முக்கிய அம்சங்களை கொண்டதாக இருந்தது (மாற்கு 1:15)

### “காலம் நிறைவேறிற்று"

70 வார தீர்க்கதரிசனத்தின் ஒரு குறிப்பு (தானி . 9:24).

அர்தசஷ்டாவின் ஆணையிலிருந்து, கிமு 457 முதல், மேசியா அபிஷேகம் பண்ணப்படும் வரை, 69 வாரங்கள் செல்லும் (வ. 25).

கிபி 27ல் இயேசுவின் ஞானஸ்நானத்தில் இது நிறைவேறியது. பாதி வாரத்திற்கு பின்பு, கிபி 31ல், இயேசு மரித்தார் (வ. 27).

### “தேவனுடைய இராஜ்யம் சமீபமாயிற்று”

இரட்சிப்பின் திட்டம் நிறைவேறத் தொடங்கியது என்ற ஒரு வாக்குறுதி.

### “மனந்திரும்பி, சுவிஷேசத்தை விசுவாசியுங்கள்”

இயேசுவின் மீதுள்ள விசுவாசத்தின் மூலமும், அவரது மன்னிப்பை ஏற்றுக்கொள்வதன் மூலமும் உடன்படிக்கையின் செயலில் பங்கேற்க ஒரு அழைப்பு.



நம்முடைய தற்போதைய செய்தியும் இந்த 3 அம்சங்களை கொண்டதாக இருக்கிறது: காலம் நிறைவேறிற்று; இயேசு வருகிறார்; நாம் மனந்திரும்பி விசுவாசிக்க வேண்டும். அப்போது அவரோடுகூட நாமும் பரலோகம் செல்வோம்.